# நிறைவேற்றுச் சுருக்கம்

**இலங்கை இரு மாபெரும் வாயப்பலைகளின் உச்சியில் இருக்கின்றது.** முதலாவது அலையானது இலங்கையை ஓர் குறைந்த வருமான நாடென்ற நிலையிலிருந்து ஒரு நடுத்தர வருமான நாடென்ற நிலைக்கு மாற்றக்கூடியது. இரண்டாவது அலையானது இலங்கையை மோதலில் சிக்குண்ட நாடு என்ற நிலையிலிருந்து அமைதி நிலவும் நாடு என்ற நிலைக்கு மாற்ற வல்லது.

உயர்கல்வித்துறையினால் பொன்னான வாய்ப்புக்களைக் கொண்ட இந்த இரண்டு அலைகளின் மீதும் இலங்கைத் திருநாட்டை இட்டுச் செல்ல முடியும். அவ்வாறு இட்டுச் செல்லவும் வேண்டும். நடுத்தர வருமான நாடு (MIC) என்ற அந்தஸ்தை நோக்கிய இலங்கையின் உயர்ச்சியை உயர்கல்வி நிறுவனங்கள் வழி நடத்துவதோடு துரிதப்படுத்தவும் வேண்டும். மேலும், அறிவூட்டப்பட்டதும், அமைதி நிறைந்ததுமான ஓர் பல்லின, பல் மத, பல் கலாச்சார சமூகமாக இலங்கை போற்றப்பட வேண்டுமானால், உயர்கல்வி முறைமையானது நாட்டினது விழுமியங்களையும், ஒழுக்கவியலையும், சமூக நிறுவனங்களையும் தூண்டிவிட வேண்டும்.

## இலங்கை நாடு உயர்கல்வி நிறுவனங்களது பொருத்தப்பாட்டினையும் தரத்தினையும் அதிகரித்து உலகத் தரத்திலான பட்டதாரிகளை உருவாக்க வேண்டும்.

**21 ஆம் நூற்றாண்டினது உலக அறிவுப் பொருளாதாரத்திலான இலங்கையின் எதிர்காலம் பிரதானமாக நாட்டின் புலமைசார், மற்றும் மனித மூலதனத்தில் தங்கியுள்ளது.** தற்போது அறிவுப் பொருளாதாரச் சுட்டியைப் (KEI) பொறுத்தவரை 140 நாடுகளுள் இலங்கை 82 ஆவது ஸ்தானத்தில் இருக்கிறது. நடுத்தர வருமான நாடுகளுக்கான சாரசரி KEI ஐ விட இது குறைவானதாகும் உரு 1. உலக போட்டித்தன்மைச் சுட்டியைப் பொறுத்தவரை 134 நாடுகளுள் இலங்கை 77 ஆவது இடத்தை வகிக்கின்றது. சுபீட்சமான ஒரு நடுத்தர வருமான நாடு (MIC) எனும் மட்டத்திற்கு உயர்வதற்கு ஆராய்ச்சியும், சுறுசுறுப்பான பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிக்கக்கூடிய புத்தாக்க ஆற்றலும் இலங்கைக்குத் தேவைப்படுகிறது. ஆக்கபூர்வமாக சிந்தித்து செயல்படுவதற்கும், கடினமான பெறுபேறுகளை ஈட்டும் விதத்தில் உழைப்பதற்கும், பொருளாதார செயற்பாடுகளைப் பலப்படுத்தும் பொருட்டும் இருக்கின்ற தொழிநுட்பங்களைப் புத்தாக்கம் செய்து ஏற்ற முறையில்

**உரு 1: அறிவுப் பொருளாதாரம்: இலங்கையும் நடுத்தர வருமான நாடுகளும் (MICS)**




**ஒப்பிடப்படும் குழுக்கள்: சகல வகைகளும்** **அளவிடப்பட்ட வருடம்: மிகவும் அண்மைய** (KAM 2008)

பயன்படுத்துவதற்குமான மக்களது ஆற்றல் இந்தக் குறிக்கோளை அடைவதற்கு மிகவும் முக்கியமானதாகும். இந்தச் சூழமைவில் திறனையும் கடின உழைப்பையும் தொழில் முயற்சியாற்றலையும் கொண்ட பட்டதாரிகளை உருவாக்கக்கூடிய உயர்கல்வி முறையொன்று இலங்கைக்குத் தேவையாகவுள்ளது.

தற்போது உயர்கல்வித்துறையினது பொருளாதாரப் பொருத்தப்பாடும் தரமும் மத்தியதர வருமான நாடொன்றிற்குத் தேவைப்படும் மட்டத்தைவிடக் கணிசமானளவு குறைவாயிருக்கின்றது. உயர்கல்வி நிறுவனங்களுக்கிடையே (HEI) மூன்று பரந்த தர மட்டங்கள் காணப்படுகின்றது. தர அளவீட்டின் கீழ் எல்லையில் குறைந்த தர கல்வி நிறுவனங்களும், நிகழ்ச்சித்திட்டங்களும் கற்கை நெறிகளும் காணப்படுகின்றன. இந்த உயர்கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த பட்டதாரிகளில் பெரும்பான்மையானவர்களுக்கு தனியார்துறையில் தொழில் பெறுவதென்பது கிட்டத்தட்ட சாத்தியமற்ற விடயமாக உள்ளது. இவர்கள் இறுதியாக வேலை-உருவாக்கும் அரச நிகழ்ச்சித்திட்டங்களினூடாக வேலைக்கமர்த்தப்படுகிறார்கள். பல்கலைக்கழகங்களினது வெளிவாரிப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் குறைந்த தரத்திற்கான மிகவும் தெளிவானதும் கூர்மையானதுமான உதாரணமாகவும், நாட்டிலுள்ள வேலையற்ற பட்டதாரிகளுள் பெரும்பான்மையானவர்களது தோற்றுவாயாகவும் அமைகின்றது. இது தவிர குறிப்பாக வடகிழக்கு மாகாணங்கள் போன்ற பின் தங்கிய பிரதேசங்களில் அமைந்துள்ள வேறுபல உயர்கல்வி நிறுவனங்களும் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் ATI களுள் பலவும் குறைந்த செயலாக்கம் கொண்ட நிறுவனங்கள் எனும் இவ்வகையில் அடங்குகின்றன.

தர அளவுத்திட்டத்தின் மத்தியில் மிதமான தரத்தினையுடைய உயர்கல்வி நிறுவனங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும் கற்கை நெறிகளும் அமைந்துள்ளன. இந்நிறுவனங்களைச் சேர்ந்த சில பட்டதாரிகள் தனியார்துறையில் வேலைவாய்ப்பினைப் பெறுகின்றனர். ஆனால் இந்த உயர்கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த பட்டதாரிகளில் ஒரு கணிசமான தொகையினரும் தனியார்துறையில் வேலைவாய்ப்பினைப் பெறுவதில்லை. இவர்கள் இறுதியாக அரசதுறைத் தொழில்களினுள் உள்ளீர்க்கப்படுகிறார்கள். குறைந்த தர மற்றும் நடுத்தரச் செயலாக்கத்தையுடைய உயர்கல்வி நிறுவனங்களது பட்டதாரிகளுக்கு பட்டப் பின் படிப்பு வாய்ப்புகள் அரிதாக உள்ளன.

தர அளவுத்திட்டத்தின் உச்சியில் சில உயர்கல்வி நிறுவனங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும் கற்கை நெறிகளும் உள்ளன. இவை ஒரு கீழ் மட்ட நடுத்தர வருமான நாட்டைப் பொறுத்தவரை ஒப்பீட்டளவில் சிறந்த தரத்தையுடையவையாக இருக்கின்றன. இந்த HEI களது பட்டதாரிகளுக்கு இலங்கைக்குள்ளும் வெளிநாடுகளிலும் உள்ள தனியார்துறை தொழிற்சந்தையில் பலமான கேள்வி காணப்படுகின்றது. இது தவிர இந்நிறுவனங்களது மிகச்சிறந்த பட்டதாரிகளுக்கு ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா, ஜப்பான் போன்ற நாடுகளிலும் வேறுபல OECD நாடுகளிலும் உள்ள மிகச் சிறந்த பல்கலைக்கழகங்களில் பட்டபின் படிப்பிற்கு வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வது இலகுவாக இருக்கின்றது. சிறந்த முறையில் செயலாற்றும் இச்சிறு பிரிவினர், நீண்ட கால வெற்றி வாய்ப்பினையும், உயர்கல்வித்துறையில் உள்ளார்ந்த ஆற்றலையும் வெளிப்படுத்துகின்றனர். கீழ் மட்டத்திலும் நடுத்தர மட்டத்திலும் செயலாற்றும் பெருந்தொகையினரை உயர் மட்டத்தில் செயலாற்றுபவர்களாக மாற்றுவதே தற்போதுள்ளள சவாலாகும்.

### *சவால்கள்*

**உயர்கல்வித்துறையின் பொருளாதாரப் பொருத்தப்பாட்டிற்கு ஆழமானதும் நீண்ட காலமாகத் தொடர்புடையவையுமான சவால்கள் காணப்படுகின்றன.** பல்கலைக்கழகப் பட்டதாரிகளினிடையே காணப்படும் நீண்ட கால வேலைவாய்ப்புப் பிரச்சினை மீது அவசரமாகக் கவனம் செலுத்தப்பட வேண்டும். பின்வரும் காரணிகள் உள்ளிட்ட பல காரணிகளால் இப்பிரச்சினை தோற்றுவிக்கப்படுவது போல் தெரிகின்றது. (a) குறிப்பாக வெளிவாரிப் மற்றும் தொலைக்கல்விப் பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சில கலை, வர்த்தக, மற்றும் விஞ்ஞான கற்கை நெறிகளைச் சேர்ந்த பட்டதாரிகளது ஒப்பீட்டளவிலான குறைந்த தரங்கள் (b) தனியார்துறையில் வினைத்திறனுடன் பணிபுரிவதற்கு தேவையான மனப்பாங்குகளையும் திறன்களையும் பட்டதாரிகள் போதியளவில் கொண்டிருப்பதில்லை எனும் கருத்து பல தனியார்துறை வேலை கொள்வோருக்கிடையே காணப்படுதல். (c) கடந்த காலங்களில் தொழில் உருவாக்கம் தடுக்கப்பட்டு, அரசதுறைக்கு ஆட்சேர்க்கும் வேலை உருவாக்கத்திட்டங்களில், அரசாங்கம் வேலைவாய்ப்பு வழங்கிய போது குறைவான பொருளாதார வளர்ச்சி காணப்பட்டமை போன்றவையாகும். பட்டதாரிகளது, குறிப்பாக வெளிவாரி மற்றும் தொலைக்கல்வி முறை பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் கலை, வர்த்தக மற்றும் விஞ்ஞான கற்கை நெறிகளைச் சேர்ந்த பட்டதாரிகளின் தொழில் மனப்பாங்குகளும் அபிலாசைகளும் பொருளாதாரத்தின் தேவைக்கேற்ப மேலும் பலமாகத் திசைமுகப்படுத்தப்பட வேண்டும்.

**ஒரு நடுத்தர வருமான நாட்டினது தொழிற்சந்தைக்கு மிகவும் முக்கியமானவையாக மாத்திரமன்றி குறிப்பாக இலங்கையில் அரிதானவையாகவும் பொதுத் திறன்கள காணப்படுகின்றன.** இந்த அருமையான திறன்களுள் மிகவும் முன்னணியில் காணப்படுபவை ஆங்கில மொழித்திறனும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத் திறன்களுமாகும் (ICT). ஒரு சர்வதேச மொழியிலும் ICT திறன்களிலும் புலமையில்லாத அல்லது புலமை குறைந்த பட்டதாரியொருவர் இருபத்தியோராம் நூற்றாண்டு அறிவு மற்றும் தகவலின் அதிகமான பகுதியைப் பெறாமல் போகிறார். அவ்வாறான ஒருவரது உற்பத்தித் திறனும் பணியிலான செயலாற்றுகையும் புகழ் வாய்ந்த தனியார்துறை நிறுவனங்கள் தமது முகாமைத்துவப்

பணியாளர்களிடமிருந்தும், தொழிநுட்ப வல்லுனர்களிடமிருந்தும் எதிர்பார்க்கும் மட்டத்தை விட பெருமளவுக்குக் குறைந்ததாகவே இருக்கும். பட்டதாரிகளில் பெரும்பகுதியினரது ஆங்கில மொழித்திறன்கள் தனியார்துறை நிறுவனங்கள் எதிர்பார்க்கும் மட்டத்தை விட குறைவாகவேயிருக்கும். உயர்கல்வி நிறுவனங்களில் காணப்படும் வசதிகளையும் இலத்திரனியல் கற்றல் வளங்கள் மற்றும் இலத்திரனியல் கற்பித்தல் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு ஒரு நடுத்தர வருமான நாடென்று பார்க்கும் பொழுது பெருமளவு குறைவானதாகவே காணப்படுகிறது.

உயர்கல்வி நிறுவனங்களுக்கும் கைத்தொழில்களுக்குமிடையிலான பலமான விஞ்ஞான தொழிநுட்ப மற்றும் புத்தாக்க இணைப்புக்கள் நடுத்தர நாடுகளுக்கு ஒரு முக்கிய தேவையாக இருக்கின்றன. ஆனால் இலங்கையில் பல்கலைக்கழக-கைத்தொழில் இணைப்புக்கள், ஆரம்பக் கட்டத்திலேயே காணப்படுகின்றன. ஒரு சுபீட்சமான நடுத்தர வருமான இலங்கையை நோக்கிய பொருளாதாரப் பாதையானது தகவல் தொழிநுட்பம், மென்பாக அபிவிருத்தி, பொறியியல், கைத்தொழில் ரீதியான பதனிடல், வங்கியியல், நிதியியல், காப்புறுதி போன்ற அறிவுச்செறிவுச் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கும். தற்போது இத்துறைகளிலான இலங்கையின் ஆற்றலும் ஸ்தானமும் ஒப்பிடக்கூடிய வளர்முக மற்றும் முன்மாதிரியான நடுத்தர வருமான நாடுகளுக்கான சராசரியை விட மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது (அட்டவணை 1ஐப் பாக்கவும்).

நாட்டிலுள்ள நிறுவனங்களது செயலாற்றுகை மற்றும் போட்டித்தன்மையை அதிகரிப்பதற்கும், பொருளாதார விருத்தியைத் துரிதப்படுத்துவதற்கும் இந்த அறிவுச்செறிவு மற்றும் தொழிநுட்பச் செறிவுச் செயற்பாடுகளில் பல்கலைக்கழகங்களுக்கும் கைத்தொழில்களுக்குமிடையிலான நெருக்கமான பங்குடமைகள் அவசரமாகத் தேவைப்படுகின்றன.

**அட்டவணை 1: புத்தாக்க ஆற்றலும் போட்டித்தன்மையும் - உலக நோக்கில் இலங்கை**

| | UNCTAD புத்தாக்க ஆற்றல் சுட்டி | UNIDO போட்டித்தன்மைக் கைத்தொழில் செயலாற்றுகைச் சுட்டி | WEF உலக போட்டித்தன்மைச் சுட்டி |
|---|---|---|---|
| பங்களாதேசம் | 106 | 56 | 107 |
| கம்போடியா | - | - | 110 |
| இந்தியா | 83 | 40 | 48 |
| இந்தோனீசியா | 87 | 38 | 54 |
| தென் கொரியா | 19 | 10 | 11 |
| மலேசியா | 60 | 15 | 21 |
| மொங்கோலியா | 69 | - | 101 |
| பாகிஸ்தான் | 100 | 49 | 92 |
| பிலிப்பைன்ஸ் | 64 | 25 | 71 |
| **இலங்கை** | **79** | **62** | **79** |
| சிங்கப்பூர் | 26 | 1 | 7 |
| தாய்லாந்து | 54 | 23 | 28 |
| வியட்நாம் | 82 | - | 68 |

*மூலம்: "பல்கலைக்கழகங்களும் தேசிய புத்தாக்க முறைமைகளும்," அல்பிரட் வாட்கின்ஸ், உலக வங்கி, 2007 உயர்கல்விச் சீர்திருத்தங்களிற்கான உபாய ரீதியான தெரிவுகள் டிசம்பர் 2007 மலேசியா.*

*குறிப்பு:*

## *உபாய ரீதியான அபிவிருத்தி விருப்பத் தெரிவுகள்*

தமது தொழிற்பாட்டில் வெளிவாரிப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை வழங்கும் பல்கலைக்கழகங்களது மேலும் ஆழமானதொரு ஈடுபாடானது இந்த நிகழ்ச்சித்திட்டங்களை பலப்படுத்துவதற்கு மிகவும் முக்கியமானதாகும். EDP களது தரத்தை உயர்த்துவதற்கு பல உபாயங்கள் உள்ளன. EDP தராதரத்திற்கும் சான்றிதழ் செயல்முறைக்கும் மாணவர்களைத் தயார்படுத்தும் தனியார் நிறுவனங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் திட்டமொன்றை அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது. அவ்வாறான நிறுவனங்கள் வேண்டப்படுகின்ற ஆகக்குறைந்த ஒரு தர மட்டத்தினைக் கொண்டிருப்பதை இது உறுதிப்படுத்தும். அத்துடன் EDP களில் பதிவு செய்யப்படும் மாணவர்களுக்கு நுகர்வோர் பாதுகாப்பினையும் இது வழங்கும். EDP களினது நிகழ்ச்சித்திட்டங்களின் தரத்தினை மேம்படுத்தும் ஒரு நடவடிக்கை என்ற வகையில் EDP களினூடாக

தற்போது வழங்கப்படும் சேவைகளை வழங்குமாறு திறந்தவெளிப் பல்கலைக்கழகங்களை மேலும் எதிர்பார்க்கலாம். இது தவிர பல்கலைக்கழக இலத்திரனியல் ஆவணங்களை மேலும் முறையான விதத்தில் பயன்படுத்துவது EDP நிகழ்ச்சித்திட்டங்களது தரத்தை மேம்படுத்துவதற்கான ஒரு பகுத்தறிவான அணுகுமுறையாகவிருக்கும். இந்தச் சந்தர்ப்பத்தில் கொழும்புப் பல்கலைக்கழகத்தினுடைய கணனிப் திணைக்களம் ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு ஒரு சிறந்த முன்மாதிரியை வழங்குகிறது.

**மாணவர்களது ஆங்கில மொழி மற்றும் தகவல் தொழிநுட்ப (ICT) திறன்களை விருத்தி செய்வது அவர்களது தொழில் வாய்ப்புக்களையும் பணியிலான உற்பத்தித் திறனையும் பெருமளவுக்கு மேம்படுத்தும்.** இந்த முன்னெடுப்பு சகல மானிடவியல், வர்த்தக மற்றும் சமூக விஞ்ஞான மாணவர்களுக்குக் குறிப்பாகத் தேவைப்படுகிறது. ஏனெனில் தொழில் கொள்வோர்கள் கூறுவதன் படி இம்மாணவர்களிடையே காணப்படும் ஒரு பிரதான பலவீனம் இவர்களது ஆங்கில மொழி மற்றும் ICT திறன்கள் தொடர்பான புலமை குறைவாக இருப்பதாகும். கலை, மானிடவியல், வர்த்தக, சமூக விஞ்ஞான பட்டங்களை வழங்கும் பல்கலைக்கழகங்களும் பீடங்களும் ICT உபகரணம் மற்றும் ஆசிரிய-மாணவர் தொடர்பு நேரம் உள்ளிட்ட மேலதிக வளங்களை இலக்காகக் கொள்ள வேண்டும். அத்துடன் தமது மாணவர்களது ஆங்கில அறிவு மற்றும் ICT திறன்களை மேம்படுத்துவதற்கு மொழித்திறன்களைப் பெற்றுக் கொள்வதற்கான மாணவ ஆதரவு போன்ற தரச்செயல் முறைகளையும் இந்நிறுவனங்கள் விருத்தி செய்ய வேண்டும். இது தெளிவான பலதரப்பட்ட நன்மைகளை ஏற்படுத்துமொரு உபாய ரீதியான முன்னெடுப்பாகவே அமைகின்றது. மேலும் இது மாணவர்களால் விரும்பப்படும் ஒரு விடயமாக அமைந்து வேலை உலகிலான அவர்களது எதிர்கால செயலாற்றுகை மீது ஒரு பாரிய தாக்கத்தை ஏற்படுத்துவதோடு, நாட்டினது எதிர்காலத் தொழிற்படையின் தரத்திற்கு ஒரு திட்டவட்டமான பங்களிப்பை வழங்குவதாகவும் அமைகின்றது. ஆங்கிலத்திலும் ICT யிலும் புலமை வாய்ந்த மக்கள் தொகையொன்று இருப்பது நாட்டில் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு, வெளிநாட்டு நிறுவனங்களை தூண்டும்.

**பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் ஒரு பகுதியாக மென் திறன்களை விருத்தி செய்வது பட்டதாரிகளது வேலைக்கமர்த்தப்படும் தன்மையை கணிசமானளவு அதிகரிக்கும்.** பல்கலைக்கழகங்களது பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் பிரதானமாக பாட உள்ளடக்கம் மற்றும் மாணவரது தொழிநுட்பத் திறன்கள் என்பவற்றின் மீதே கவனக்குவிப்பு செய்திருக்கின்றன. இருப்பினும், முன்னெடுப்பு, பயிற்றப்படக்கூடிய தன்மை, நெகிழ்ச்சித்தன்மை, குழு மனப்பான்மை (orientation), தொடர்பாடல், சாதகமான தொழில் மனப்பாங்குகள், ஒழுக்கக் கட்டுப்பாடு போன்ற மனப்பாங்குகளையும் திறன்களையும் வேலைகொள்வோர் எதிர்பார்க்கின்றனர். அத்தகைய மனப்பாங்குகளையும் திறன்களையும் மாணவரிடையே விருத்தி செய்வது பட்டதாரிகளது வேலைக்கமர்த்தப்படும் தன்மையை பெருமளவுக்கு அதிகரிக்கும்.

**மாணவர்களுக்கு வேலை அனுபவத்தை வழங்குவதற்கு உள்ளகப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை விரிவுபடுத்துதல் உயர்கல்வி நிகழ்ச்சித்திட்டங்களது பொருத்தப்பாட்டினைப் பலப்படுத்தும்.** அத்தகைய உள்ளகப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் இரு வகையான நன்மைகளைக் கொண்டுள்ளன. கைத்தொழிலின் பக்கத்திலிருந்து பார்க்கின்ற போது உள்ளகப் பயிற்சியின் போது தமது கைத்தொழில் தேவைகளுக்காக மாணவர்களை அறிவூட்டி பயிற்றுவித்து மதிப்பிட வேலை கொள்வோருக்கு அவை உதவுகின்றன. இது திட்டவட்டமான மனித மூலதனத்தைக் கட்டியெழுப்புவதோடு தேடித் தரம் பிரிக்கும் செலவுகளைக் குறைக்கின்றது. மாணவரது பக்கத்திலிருந்து நோக்கும் போது தனியார்துறை வேலைத்தலங்களது திறன்களையும் கலாச்சாரத்தையும் கற்றுக் கொள்வதற்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்குகிறது. அத்துடன் தனியார்துறை வேலைவாய்ப்பிற்கான மனப்பாங்கு சார் மற்றும் தொழிநுட்பத் திறன்களை விருத்தி செய்வதற்கும் இது உதவும்.

**தொழில் வழி காட்டல் நிகழ்ச்சித்திட்டங்களில் தனியார்-அரசதுறைப் பங்குடமைகளை அதிகரிப்பது இந்நிகழ்ச்சித்திட்டங்களை மேலும் பொருத்தமானவையாக மாற்றும்.** தனியார்துறையைச் சோந்த பிரதிநிதிகளது பங்குபற்றலை அதிகரிப்பதன் மூலம் பல்கலைக்கழக் தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் செழுமைப்படுத்தப்படும். தனியார்துறையில் ஏற்படக்கூடிய வாய்ப்புக்களின் வகைகளையும், அத்தகைய வாய்ப்புக்களிலிருந்து நன்மையடைவதற்கு மாணவருக்குத் தேவையான திறன்களையும் இப்பிரதிநிதிகள் முன்கூட்டியே தெரியப்படுத்துவர். அப்பொழுது அத்தகைய வாய்ப்புக்களையும் திறன்களையும் மனதில் கொண்டு மாணவர் கற்க வேண்டிய பாடநெறிகளின் வகைகள் போன்ற தெரிவுகளை மேற்கொள்வர்.

**இலங்கை ஒரு உயர்ந்த செயலாற்றுகையைக் கொண்ட நடுத்தர வருமான நாடாவதற்கு விஞ்ஞானம், தொழிநுட்பம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆகிய துறைகளில் கைத்தொழில்-பல்கலைக்கழக இணைப்புக்களை விருத்தி செய்வது மிகவும் முக்கியமானதாகும்.** ஒரு நடுத்தரக் கைத்தொழில் நாடு என்ற வகையில் இலங்கையின் பொருளாதார முன்னேற்றமானது தொழிநுட்பததைப் பெற்று இயங்கச் செய்து அதிகரிக்கும் சிக்கல் தன்மை, தரம், உற்பத்தித் திறன் போன்ற மட்டங்களை பயன்படுத்துவதில் பிரதானமாகத் தங்கியிருக்கும். அத்துடன் தொடர்ச்சியான முன்னேற்றங்களையும் புத்தாக்கங்களையும் உருவாக்குவதன் மீதும் இது தங்கியிருக்கும். தொழிநுட்பத்தைப் பெற்றுக் கொள்ளுதல், பயன்படுத்துதல், தேவைக்கேற்ப மாற்றியமைத்தல் மற்றும் புத்தாக்கம், அறிவு உருவாக்கம் ஆகிய விடயங்களில் பல்கலைக்கழகங்களது ஆராய்ச்சித் திறன்களும் ஆற்றல்களும் நிறுவனங்களுக்கு தனித்துவமான விதத்தில் உதவமுடியும். தொழில் சார்ந்த வகையில் முகாமை செய்யப்படும் பல்கலைக்கழக வியாபார நிலையங்கள், தொழிநுட்ப வர்த்தக

மயமாக்கல் அலுவலகங்கள் மற்றும் தொழிநுட்ப தரகர் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றை விருத்தி செய்வதன் மூலம் விஞ்ஞானம், தொழிநுட்பம் மற்றும் ஆராயச்சியும் அபிவிருத்தியும் ஆகிய துறைகளிலான அத்தகைய கைத்தொழில்-பல்கலைக்கழக இணைப்புக்களை விருத்தி செய்வதற்கு பெருமளவுக்கு உதவி கிடைக்கும்.

## உயர்கல்வித் தேவைகள் சர்வதேச தரத்தில் அமைவதற்கான ஆட்சிச் சட்டகம்

**உரு 2: உயர்கல்வியின் வகைகள்**




*மூலம் : கிரப், W.N. (2003), மூன்றாம் நிலைக் கல்லூரிகளினதும் நிறுவனங்களினதும் பங்கு: இடைநிலைக்குப் பின்னரான கல்வியை மீளக்கட்டமைப்பதிலான சம நிலைகள், பாரிஸ்.*

**உயர்கல்வி முறைகளின் உலகளாவிய சூழலில் நிர்வாகம் என்பது மிகவும் சிக்கலான துறைகளில் ஒன்றாக இருக்கின்றது.** இதற்குக் காரணம் கிடையானதும் நிலைக்குத்தானதுமான இணைப்புக்களையும் தொடர்புகளையும் கொண்ட உயர் நிறுவனங்களில் செழுமையான பல்வகைகளும் பல்லினத்தன்மையும் காணப்படுவதேயாகும். இலங்கையின் உயர்கல்வித்துறையில் இந்த வகையைச் சேர்ந்த பல நிறுவனங்கள் உள்ளன. ஆனால் மொத்தத்துறைக்கு மேலும் ஒருங்கிசைவுத் தன்மையும் உள்ளக ரீதியான முரண்பாடற்ற தன்மையும் தேவைபடுகின்றது. தனிப்பட்ட நிறுவனங்கள் அனுபவிக்கக்கூடிய சுய அதிகாரத்தின் அளவும் இந்தச் சுய அதிகாரத்துடன் இணைந்திருக்க வேண்டிய வகைப் பொறுப்பு மற்றும் பொறுப்பு முறைகளும் உயர்கல்வி நிருவாகம் தொடர்பான பிரதானமான விவாதமாக அமைகின்றது. பொதுவான உலகப் போக்கு, சுய அதிகாரம் வழங்கப்படுவதற்கு சவாலாக அமைகின்றது. இது மேலும் சிறந்த செயலாற்றுகைக்கு சாதகமானதாகப் நோக்கப்படுகிறது.

**இலங்கையிலுள்ள உயர்கல்வித்துறையின் நிறுவன ரீதியான கட்டமைப்பானது, மத்திய ஸ்தானத்தில் அதிகாரம் குவிந்திருந்து மேலிருந்து கீழ் செல்லும் மாதிரிக்கும், உயர்கல்வி நிறுவனங்கள் பெருமளவுக்கு சுய அதிகாரம் கொண்டவையாகவும் வலுவூட்டப்பட்டவையாகவும் காணப்படும் பன்முகப்படுத்தப்பட்ட ஒரு மாதிரிக்குமிடையில் அமைந்துள்ளது.** சுய அதிகாரத்தினதும் வகைப்பொறுப்பினதும் அளவு உயர்கல்வித்துறையினுள் கணிசமானளவு வேறுபடுகின்றது. SLIATE முறையானது மையத்தில் அதிகாரம் குவிந்து மேலிருந்து கீழ் செல்லும் மாதிரியாகும். அரச பல்கலைக்கழகங்கள் குறிப்பாக கல்வி சார் உத்தியோகத்தரது நியமனம், கலைத்திட்ட (பாடவிதானம்) அபிவிருத்தி, கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி செயற்பாடுகள் தொடர்பாக SLIATE ஐ விட கூடிய அதிகாரத்தைக் கொண்டுள்ளன. எனினும், வளர்ச்சியடைந்த நாடுகளிலும் நடுத்தர வருமான நாடுகளிலும் அரச பல்கலைக்கழகங்கள் சுய அதிகாரம் கொண்டவையாக இருக்கும் வேறுபல அம்சங்கள் இலங்கையில் மையப்படுத்தப்பட்டுள்ளன. தனியார் உயர்கல்வித்துறையானது இலாபமீட்டா நிறுவனங்களுக்கு நிறுவன ரீதியான ஆணையின் கீழும், இலாபமீட்டும் நிறுவனங்களுக்கு சந்தைச் சக்தியின் கீழும் பிரதானமாகத் தொழிற்படுவதுடன், அரசிலிருந்து விடுபட்டு கிட்டத்தட்ட பூரண சுய அதிகாரத்தைக் கொண்டதாகவும் இருக்கிறது.

### *சவால்கள்*

**வேறுபட்ட வகைகளையும் மட்டங்களையும் சார்ந்த உயர்கல்வி நிறுவனங்களுக்கிடையில் பாதைகளும் அசைவும் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டவையாக காணப்படுகின்றன.** உரு 1 இல் காட்டப்பட்ட வகையின் அடிப்படையில் இலங்கையின்

உயர்கல்வித்துறையானது பல்வகைத் தன்மை கொண்ட ஒரு பரந்த வீச்சில் அடங்கும் நிறுவனங்களைக் கொண்டுள்ளது. இத்துறை ஒரு இரட்டை முறையிலிருந்து முத்தரப்பு முறையை நோக்கி உருமாறிக் கொண்டிருப்பதைக் காணலாம். ஆயினும் கல்வி, பயிற்சி, தொழில் பெறும் பாதை ஆகியவற்றைச் சென்றடையும் வசதியும், அதே போன்று கல்வி, பயிற்சி, தொழில் பெறும் பாதை என்பவற்றினுள் அசைவையும் முன்னேற்றத்தையும் வழங்குகின்ற தெளிவான கற்றல் பாதைகளும் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன. நவீன சிந்தனையானது வேலை வாய்ப்புக்கான கல்வி - ஒரு குறிப்பிட்ட தொழிலைச் செய்வதற்கான ஆற்றலை விருத்தி செய்தல் என்பதிலிருந்து வேலைக்கமர்த்தப்படும் தன்மைக்கான (employability) கல்வி-பெற்றுக் கொண்ட திறன்களை புதிய வேலைச் சூழலுக்கு இசைவாக்கிக் கொள்வதற்கான ஆற்றல் என்பதற்கு நகர்ந்திருப்பதை கவனத்தில் கொள்ளும் போது அவ்வாறான பாதைகள் இல்லாதிருப்பது அல்லது குறைவாயிருப்பது இசைவாக்கமடையக் கூடியதும் தொழிநுட்ப ரீதியில் பயிற்றப்பட்டதுமானதொரு தொழிற்படையின் விருத்திக்குத் தடையாக அமைகிறது.

**பல விடயங்களில் மிகையான மத்திய கட்டுப்பாடு செயலாற்றுகைக்குத் தடையாக அமைகிறது என கல்வியியலாளர்கள் மற்றும் பல்கலைக்கழக பணியாளர்களுடனான கலந்தாலோசனைகள் காட்டுகின்றன.** தொழற்பாடு சார்ந்த பல தீர்மானங்களை எடுக்க வேண்டியிருப்பதன் காரணமாக உயர்கல்வி அமைச்சும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் (UGC) தேவையற்ற நிர்வாக வேலைப்பழுவை எதிர்கொள்கின்றன. இது மாறாக உயர் மட்ட கொள்கை விடயங்களுக்காக இந்நிறுவனங்கள் செலவிடும் நேரத்தையும் செலுத்தும் கவனத்தையும் மட்டுப்படுத்துகின்றது. மத்திய கட்டுப்பாடுகள் மற்றும் அனுமதிகளைப் பெறவேண்டிய தேவை என்பனவற்றின் காரணமாக பல்கலைக்கழகங்களில் தொழில் முயற்சித்தன்மையும் (enterprenialism) முன்னெடுப்பும் குறைவடைகிறது. மத்திய நிறுவனங்கள் தீர்மானங்களை மேற்கொள்ளுகின்ற போது தாமதங்கள் மேலும் மேலும் குவியக்கூடும். இம்முறைமையினுடைய மையப்படுத்தப்பட்ட அம்சங்களால் தோற்றுவிக்கப்படும் நீண்ட நிருவாக சங்கிலிகளின் விளைவாக தனிநபர் அதிகாரமும் முறைசாரா உறவுகளும் நடைமுறை சார்ந்த வினைத்திறனை தடுக்கக்கூடும்.

**பல்கலைக்கழகங்களின் நிர்வாகமானது பழைமைவாத பொதுநலவாய மாதிரியை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்கிறது.** ஆனால் இந்த மாதிரியின் பண்புகளாக தற்போது அமைகின்ற நவீன அபிவிருத்திகள் சிலவற்றை இது தவற விடுகின்றது. உதாரணமாக ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா, கனடா போன்ற கூடுதலாக முன்னேற்றமடைந்த பொது நலவாய உயர்கல்வி முறைகளைப் போலன்றி அரச பல்கலைக்கழகங்களுக்கு நியம (normative) நிதிவழங்கல் முறைமைகள் இல்லை: பதிலாக இலங்கையிலுள்ள தனிப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கிடையில் மீண்டெழும் நிதியினை வழங்குதல் பெருமளவு வரலாற்று ரீதியான மட்டங்களை அடிப்படையாக கொண்டமைந்துள்ளது. அத்துடன் மூலதன நிதி வழங்கலானது பிரதானமாக தனியான நிறுவனங்கள் உயர்கல்வியமைச்சு/பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் நிதித்திட்டமிடல் அமைச்சு ஆகியவற்றுக்கிடையேயான பேச்சு வார்த்தைகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. உயர்கல்வி நிறுவன கட்டமைப்பானது கூடுதலாக வளர்ச்சியடைந்த உயர்கல்வி முறைமைகளில் பொதுவாக இருப்பதைவிட அதிக அளவில் மத்திய அதிகார நிறுவனங்கள் தலையிடும் தன்மையை கொண்டிருக்கின்றது. இதன் விளைவாக பல்கலைக்கழகங்களது தற்போதைய முகாமைத்துவ மற்றும் நிருவாக ஆற்றல் ஒப்பீட்டளவில் குறை விருத்தி உடையதாக காணப்படுகிறது. ஒப்பீட்டளவில் புதிய பல்கலைக்கழகங்கள் மற்றும் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களிலும் பின்தங்கிய பிராந்தியங்களில் குறிப்பாக வடகிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள பல்கலைக்கழகங்களிலும் இந்நிலைமை காணப்படுகிறது.

**தர உறுதிப் பொறி முறைகள் குறுகிய அளவிலேயே தொழிற்படுகின்றன. இவை கணிசமான அளவு விரிவுபடுத்தப்பட வேண்டும்.** மாற்று உயர்கல்வித்துறை, தனியார் உயர்கல்வித்துறை மற்றும் வெளிவாரிப்பட்ட படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு தர உறுதிப் பொறிமுறைகள் இலங்கையில் காணப்படவில்லை, அல்லது குறைவாகக் காணப்படுகின்றன. அரச பல்கலைக்கழகங்களுள் பட்டப்பின்படிப்புக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு தர உறுதிப் பொறிமுறைகள் இப்பொழுது தான் ஆரம்பித்துக் கொண்டிருக்கின்றன. இவை எதிர்காலத்தில் கணிசமான அளவுக்கு அபிவிருத்தி செய்யப்பட வேண்டியிருக்கும். பட்டப்படிப்பு மட்டத்தில் அண்மைக் காலத்தில் தர உறுதிச் செயன்முறைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. பல்கலைக்கழக முறைமையினது ஒரு பிரிக்க முடியாத பகுதியாக மாறும் அளவுக்கு இவை இப்பொழுது அபிவிருத்தி செய்யப்பட்டு பலப்படுத்தப்பட வேண்டியிருக்கின்றன.

## *உபாய ரீதியான அபிவிருத்தி விருப்பத் தெரிவுகள்*

உயர்கல்வித்துறையினது நிர்வாகத்தை நவீனமயப்படுத்துவதற்கு பல்வேறு வகையான முன்னெடுப்புக்களும் சீர்திருத்தங்களும் தேவைப்படுகின்றன.

**உயர்கல்வித் துறையினது நிர்வாக சட்டகத்தைப் பலப்படுத்துவதற்கு ஒரு தேசிய தராதர சட்டகத்தை விருத்தி செய்தல், முன்னுரிமைக் கொடுக்கப்படும் ஓர் விடயமாகும்.** இந்தச் சட்டகமானது பல்கலைக்கழகங்களையும், மாற்று உயர்கல்வி நிறுவனங்களையும் தொலைக்கல்வி மற்றும் வெளிவாரிப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களையும் உள்ளடக்க வேண்டும்.

(தேசிய தகைமைச் சட்டங்களின் சர்வதேச உதாரணங்களுக்கு பெட்டி 1 ஐப் பார்க்கவும்). வேறுபட்ட பல வகையான நிறுவனங்களுக்கிடையில் சென்றடையும் வசதிக்கும் அசைவிற்குமான பாதைகளை இது ஸ்தாபிக்கும். திறன்களைப் பெறுவதற்கான தமது தேவைகள் மற்றும் செங்குத்தானதும் கிடையானதுமான தொழில் அசைவு ஆகியவற்றைப் பொறுத்து தனிநபர்கள் உயர்கல்வித்துறைக்கும் தமது தொழில் வாழ்க்கைக்குமிடையில் நெகிழ்ச்சித் தன்மையுடன் நகர்ந்து செல்லும் பொருட்டு உயர்கல்வித்துறையை தனி நபர்களது தொழில் பாதையுடன் இணைக்கும் பணியையும் இது செய்யும்.

**பெட்டி 1: தேசியத் தகைமைச் சட்டகத்திற்கான சர்வதேச உதாரணங்கள்**

**அவுஸ்ரேலியத் தகைமைச் சட்டகம் (AQF)**

AQF பின்வரும் குறிக்கோள்களைக் கொண்டுள்ளது.

உயர்கல்வி, தொழில்கல்வி மற்றும் பயிற்சி நெறிகளால் தகமைகளையும், பட்டங்களையும், தரங்களையும் கொண்ட ஒரு தனியான பரந்த முறையாக ஒன்று சேர்த்தல்.

துறைகளுக்கும் வாழ்க்கை நீடித்த கற்றலுக்குமிடையிலான நெகிழ்ச்சியுள்ள கல்வி மற்றும் பயிற்சிப் பாதைகளுக்கு ஆதரவு வழங்குதல்.

கல்வி மற்றும் பயிற்சித் தகைமைகளுக்குமிடையில் சமமான கௌரவத்தை ஊக்குவித்தல்.

கல்வி மற்றம் பயிற்சித்துறைகளில் வழங்குனர்களது நோக்கங்களினது பல்வகைத் தன்மையை அதிகரித்தல்.

துறைகளுக்கிடையிலான பங்குடமைகளை ஊக்குவித்தல்.

தர உறுதி தெளிவாக எடுத்துரைத்தல் கற்கை அலகு மாற்றீடு ஆகியவற்றை ஆதரித்தல்.

**ஐரிஸ் தேசிய தகைமைகள் சட்டகம் (INFQ)**

அடிப்படைச் சான்றிதழ்களிலிருந்து கலாநிதிப்பட்டம் வழங்குதல் வரையிலான பத்து மட்டங்களைக் கொண்ட ஒரு கட்டமைப்பே INFQ ஆகும். கற்றல் விளைவுகளின் பரந்த விவரணங்களாகிய "மட்டக்குறிகாட்டி"களால் மட்டங்கள் வரையறுக்கப்படுகின்றன. பொதுவான பண்புகளையும் மட்டங்களையும் பகிர்ந்து கொள்ளும் பெயரிடப்பட்ட தகைமை, அளிப்புக்களினது வகைகளாக மட்டக் குறிகாட்டிகளின் அடிப்படையில் பட்டமளிப்புகளின் வகைகள் (awards) வரையறை செய்யப்படுகின்றனவே தவிர. INFQ கற்கை அலகு (credit) அடிப்படையில் அமைந்ததல்ல. ஆயினும் ஐரோப்பிய கற்கை அலகு (credit) மாற்றீட்டு முறைமை (ACTS) மற்றும் தொழில் கல்விக்கும் பயிற்சிக்குமான ஐரோப்பிய கற்கை அலகு ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளும் பொருட்டு ஒரு கற்கை அலகு ஏற்பாடு, விருத்தி செய்யப்படுகிறது.

**உயர் தொழிநுட்ப நிறுவனங்களுக்கு (ATI) அதிகரித்த அதிகாரம் வழங்கப்பட்டு இறுக்கமாக மையப்படுத்தப்பட்ட SLIATE கட்டமைப்பு தளர்த்தப்பட வேண்டும்.** குறிப்பாக கல்வி ஏற்பாட்டு அபிவிருத்தி மதிப்பீடு பரீட்சைகள் போன்ற SLIATE இனுடைய தலைமை அலுவலகமானது திட்டமிடல், கண்காணிப்பு, பகுப்பாய்வு மற்றும் கொள்கை அபிவிருத்திக்கான ஒரு மேலும் உயர்ந்த மட்ட அமைப்பாக விருத்தியடைய வேண்டும். இந்த நிறுவனங்கள் தமது புதிய பணிகளைப் பயனுறுதியுடன் செய்வதற்கு உதவும் விதத்தில் SLIATE தலைமை அலுவலகத்திலும் மற்றும் ATI களிலும் ஏற்பட வேண்டிய மேற்படி மாற்றங்களுக்கு முன்னராக அல்லது அவற்றுடன் இணைந்த விதத்தில் பணியாளர் அபிவிருத்தி, அமைப்பு ரீதியான பலப்படுத்தல் மற்றும் ஆற்றலைக் கட்டியெழுப்புதல் ஆகிய நடவடிக்கைகள் இடம்பெற வேண்டும்.

**SLIATE நிறுவனங்களது தர மேம்பாடு என்பதும் ஒரு உயர்ந்த முன்னுரிமை கொடுக்கப்படும் விடயமாகும்.** மாற்று உயர்கல்வித்துறையானது பல்கலைகழகத்துறையை விட குறைந்தளவு கொள்கை கவனத்தை பெற்றிருப்பதோடு ஒப்பீட்டளவில் குறைவிருத்தி அடைந்த துறையாகவும் காணப்படுகிறது. SLIATE ஐ பலப்படுத்துவதற்கு கணிசமான அளவு நிறுவன அபிவிருத்தி எதிர்காலத்தில் தேவைப்படுகிறது. மத்திய மட்டத்தில் SLIATE க்கு ஒரு கல்விசார் பணியாளர் தலைமைத்துவ நிறுவகமொன்று அமைக்கப்பட வேண்டும். இந்த நிறுவகமானது கற்றல் புத்தாக்கங்கள், வேலையை அடிப்படையாக கொண்டமைந்த கற்பித்தல்கள் மற்றும் மதிப்பீட்டு முறைமைகளை வழங்கி கற்பிக்கும் பணியாளருக்கு உதவுவதற்கான ஆணையையும் கொண்டிருக்க வேண்டும். கலைத்திட்ட பரீட்சைகள், மதிப்பீட்டு முறைமைகள் ஆகியவற்றை வடிவமைத்தலில் தனியார்துறையும் ஈடுபட வேண்டும். இந்த சூழமைவில் SLIATE நிறுவனங்கள் தொழிற்சந்தைக்கு, மேலும் சிறந்த விதத்தில் சேவை செய்வதற்கும் ஆதரவு வழங்குவதற்கும் தனியார்துறை மற்றும் தொழில் கொள்வோர் சம்மேளனங்களின் பிரதிநிதித்துவத்துடன் கூடிய நிகழ்ச்சித்திட்ட ஆலோசனைக் குழுக்கள் மிகவும் உபயோகமாக அமையும்.

**பல்கலைக்கழகங்களுக்கு அதிகாரங்களை மேலும் பகிர்ந்தளிப்பதனை பல துறைகளில் கருத்தில் கொள்ளலாம்.** இவற்றில் கல்வி சார் பணியார்களுக்கு பதவி உயர்வுகளை வழங்குதல், கல்வி சார் சம்பள மட்டங்களை குறிப்பாக பற்றாக்குறை

பாடங்களில் நிர்ணயித்தல், கல்வி சாரா பணியாளர்களை பதவிகளில் சேர்த்துக் கொள்ளுதல், புதிய கல்வி சார் கற்கை நெறிகளை விருத்தி செய்தல், ஒரு நியம வரவுசெலவு திட்டத்தினுள் புதிய கல்விசார் பதவிகளை உருவாக்குதல், மற்றும் நிறுவனங்களது நிருவாக கட்டமைப்பு தொடர்பான மாற்றங்கள் என்பன அடங்கும். அதிகாரப் பகிர்வு பயனுறுதி உடையதாக அமைவதற்கு முதலில் தெளிவான வகைப்பொறுப்பு பொறிமுறைகளை ஸ்தாபித்தல் அவசியமாக இருக்கும். இரண்டாவதாக பல்கலைக்கழகங்களுக்கு மேலும் பொறுப்பினையும், வகைப்பொறுப்பினையும் வழங்குவதாக இருந்தால் பல்கலைக்கழக தலைமையினதும் நிருவாகத்தினதும் முகாமைத்துவ ஆற்றல் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

**முழு உயர்கல்வித்துறைக்குமென ஒரு தர உறுதி முறைமையினை ஸ்தாபித்தல் மிகவும் முக்கியமானதாகும்.** மாற்று உயர்கல்வித்துறை, பட்டப் பின் படிப்புக் கல்வி, பட்டப்படிப்பு, தொலைக்கல்வி மற்றும் தனியார் உயர்கல்வித்துறையில் நிகழ்ச்சித்திட்டங்களையும் கற்கை நெறிகளையும் உள்ளடக்குகின்ற தர உறுதிப் பொறிமுறைகள் நாட்டுக்கு அவசியமாக இருக்கின்றன. தர உறுதிக்கும் உத்தியோகபூர்வ அங்கீகாரத்திற்கும் பெருந்தொகையான மாதிரிகள் இருப்பதனை சர்வதேச மாதிரிகள் காட்டுகின்றன. இலங்கை முன்மாதிரியாகக் கொள்ளக்கூடிய பல நாடுகளில் காணப்படும் மாதிரிகளை அறிக்கை கலந்துரையாடுகின்றது (பெட்டி 2). எந்த மாதிரி தேர்ந்தெடுக்கப்பட்டாலும் அரசதுறை மற்றும் தனியார்துறை உயர்கல்வி நிறுவனங்களுக்கு பொதுவான நியமங்களும், அளவு கோல்களும், ஒத்த செயல்முறைகளும் தர உறுதி நிறுவனத்தினால் பிரயோகிக்கப்படுவது முக்கியமானது.

**பெட்டி 2: சர்வதேச தர உறுதி மாதிரிகள்**

- **ஐ.அமெரிக்கா:** அதன் 3,600 அங்கத்துவ உயர்கல்வி நிறுவனங்களால் பேணப்படும் ஒரு சுய அதிகாரம் கொண்ட அமைப்பு (உயர்கல்வி அங்கீகாரத்திற்கான சபை).
- **தென் ஆபிரிக்கா:** உயர்கல்வியிலான தரம் தொடர்பாக அமைச்சருக்கு ஆலோசனை வழங்கும் பொறுப்பினைக் கொண்டதாக கல்வியமைச்சருக்கான சுயாதீனமான நியதிச்சட்ட ஆலோசனைச் சபை ஒன்றினது உபகுழு.
- **மலேசியா:** உயர்கல்வி அமைச்சினுடைய A QA பிரிவு.
- **நியுசிலாந்து:** உபவேந்தர்களது குழுவினால் தாபிக்கப்பட்ட ஒரு சுயாதீன சபை.
- **ஐ.இராச்சியம், அவுஸ்ரேலியா, தாய்லாந்து:** தனக்குச் சொந்தமானதொரு சுயாதீனமான பாராளுமன்றச் சட்டத்துடன் அல்லது சாசனத்துடன் கூடிய ஒரு சுய அதிகாரம் படைத்த அமைப்பு.

## உருமாற்றப்பட வேண்டிய கல்விவாய்ப்பு மற்றும் உள்ளடக்கல் தேவைகளது கட்டமைப்பு

**குறைந்தளவு உயர்கல்வி ஆட்சேர்ப்பினைக் கொண்ட ஒரு நாடு என இலங்கையை விளங்கிக் கொள்வது தவறானதாகும்.** 5%ஐ தாண்டாத ஒரு மொத்த உயர்கல்வி ஆட்சேர்ப்பு விகிதத்தினை (GER) இலங்கை கொண்டிருக்கின்றது என்று சில பிரபல்யமான அறிக்கைகள் கூறுகின்றன. ஆனால் இத்தொகையானது ஒரு பாரிய குறைமதிப்பீடாக இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. இதற்குக் காரணம் EDP களிலும் தனியார் உயர்கல்வித்துறையிலும் இணைந்திருக்கும் மாணவர்களை இது காட்டவில்லை. இந்த மாணவர்களும் காட்டப்பட்டால் GER ஆனது சுமார் 21% னை அடையும். இது ஒப்பீட்டளவில் கணிசமானளவு செல்வந்த நாடுகளாகவுள்ள பிரேசில், எல்சல்வடோர், ஜமேக்கா போன்ற நாடுகளுக்குச் சமமான ஸ்தானத்தில் இலங்கையை வைக்கும். ஆயினும் EDP களில் இணைந்து கொள்ளும் அனைத்து மாணவர்களும் சுறுசுறுப்பான விதத்தில் உயர்கல்வியைத் தொடர்ந்து கொண்டிருக்கவில்லை என்ற விடயத்தை காட்டும் விதத்தில் இந்தத் தொகை சீர்செய்யப்பட வேண்டியுள்ளது. இது செய்யப்படும் பொழுது இந்திய அல்லது மொரோக்கோ வீதங்களுக்குச் சமமானதும், ஆயினும் மதிக்கப்படக்கூடியதுமான சுமார் 10-12 எனும் வீதமாக GER அமைகிறது.

### *சவால்கள்*

**இலங்கையின் உயர்கல்வி ஆட்சேர்ப்பின் கட்டமைப்பும் கூறமைப்பும்** (composition) **பல குறைபாடுகளைக் கொண்டுள்ளன.** முதலாவதாக சுமார் 60% ஆகக் காணப்படும் ஆட்சேர்ப்பின் மிகப் பெரிய பகுதி வெளிவாரிப் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களில் காணப்படுகின்றது. இங்கு மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் சேர்ந்து பரீட்சைகளுக்கு தோன்றுகின்ற போதிலும் அவர்கள் விரிவுரைகளுக்கோ அல்லது வகுப்புகளுக்கோ சமூகமளிப்பதுமில்லை, பல்கலைக்கழகத்திலிருந்து கல்விசார் உதவியைப் பெறுவதிலுமில்லை. உயர்கல்வி வாயப்பினையும், பரப்பினையும் விரிவாக்குவதற்கு இது அரசாங்கத்திற்கு ஒரு செலவு குறைந்த விருப்பத் தெரிவாக இருந்து வருகிறது. ஆனால் அதன் தரம் இழக்கப்படுகிறது. வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகளில் பெருந்தொகையினர் இந்த EDP களைச் சேர்ந்தவர்களாக உள்ளனர்.

இரண்டாவதாக, அரசதுறைக்கும் தனியார்துறைக்கும் இடைப்பட்ட மாணவர் அனுமதி தொடர்பான சமநிலை தனியார்துறைக்குப் பாதகமாகும் வகையில் மிகவும் பாரபட்சமானதாக அமைந்துள்ளது. தனியார்துறை அனுமதி 12% ஆகும். இதற்குக் காரணம் இலங்கையின் பலமான அரச மைய உயர்கல்வி முறையாகும். ஆயினும் இலங்கையின் உள்வாரி உயர்கல்வி நிகழ்ச்சித்திட்டங்களிலான மாணவர் அனுமதியை மொத்த மாணவர் அனுமதியில் 40% ஆகக் குறைப்பதற்கு

இது நிர்ப்பந்தித்தது. இங்கு மிகுதி 60 வீதமும் EDP களில் காணப்படுகின்றது. மேலே கலந்துரையாடப்பட்டது போன்று, இது முழுத்துறையினதும் தரத்தினைக் குறைவடையச் செய்கின்றது. அத்துடன் உயர்கல்வி வாய்ப்பு மற்றும் பரப்பு விரிவாக்கத்திற்கு பங்களிப்புச் செய்வதற்கான தனியார்துறையின் உள்ளார்ந்த ஆற்றலை இலங்கை பயன்படுத்துவதிலிருந்து இது தடுக்கிறது.

மூன்றாவதாக, அரச துறையிலுள்ள உயர்கல்வி நிறுவனங்களிலும் தொழிலை அடிப்படையாகக் கொண்ட மாற்று உயர்கல்வி நிறுவனங்களிலும் மாணவர் அனுமதி சிறிய அளவாகவே உள்ளது. உலக உயர்கல்விச் சூழலில் இது முக்கியமானதும் வளர்ந்து வருவதுமான ஒரு துணைத்துறையாகும். ஆயினும் இம்முக்கிய துணைத்துறையின் உள்ளார்ந்த ஆற்றல் இலங்கையில் குறைவாகவே பயன்படுத்தப்படுகிறது. SLIATE இல் மாணவர் அனுமதி தொடர்ந்தும் மிகச்சிறிய அளவாக உள்ளது. இது மொத்த உயர்கல்விக்கான மாணவர் அனுமதியில் 3% ஆக மாத்திரமே உள்ளது.

நான்காவதாக, பல்கலைக்கழகங்களது மரபு ரீதியான பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் இணையும் மாணவர் தொகையில் இன்றும் தாராளமாக கலை, முகாமைத்துவம், வணிகம், சட்டம் ஆகிய துறை பெரிய இடத்தை வகித்து ஆக்கிரமிக்கும் அதேவேளை விஞ்ஞான மற்றும் தொழிநுட்பத்துறைகள் குறைவாகவே பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றன. ஒரு நடுத்தர வருமான நாடொன்று விரைவாக வளர வேண்டுமானால் திறனும் ஆற்றலும் கொண்ட விஞ்ஞான மற்றும் தொழிநுட்பப் பட்டதாரிகள் பெருமளவு அந்நாட்டிற்குத் தேவைபடுகின்றனர்.

## *உபாய ரீதியான அபிவிருத்தித் தெரிவுகள்*

**இலங்கை அபிவிருத்தியடையும் போது உயர்கல்விக்கான கேள்வி அதிகரிக்கும். இலங்கை உயர்கல்வித்துறையிலுள்ள இடங்களின் நிரம்பலை விரிவுபடுத்தும் வழிகளை கண்டறிய வேண்டியிருக்கும்.** உயர்கல்வித்துறையின் கட்டமைப்பையும் கூறமைப்பையும் (composition) பலப்படுத்துவதற்கான ஒரு சிறந்த வாய்ப்பினை இது வழங்கும். இந்தக் குறிக்கோளை இது அடைந்து கொள்வதற்கு அரசாங்கத்திற்கு பல கொள்கை முன்னெடுப்புக்கள் தேவைப்படுகின்றன.

SLIATE **இனால் வழங்கப்படுகின்ற கற்கை நெறிகள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள், தொழிலை அடிப்படையாகக் கொண்ட மாற்று உயர்கல்வி நிகழ்ச்சித்திட்டங்களில் மாணவர் அனுமதி காலப்போக்கில் விரிவாக்கச் செய்பவையாகக் காணப்பட வேண்டும்.** மாற்று உயர்கல்வித்துறை கற்கை நெறிகள் நேரடியாகத் தொழிலை அடிப்படையாகக் கொண்டவையாகவும் பிரதான சந்தை வேலைவாய்ப்புக்களுக்கு பொருத்தமானவையாகவும் உள்ளன. மேலும் இந்நிறுவனங்கள் வழமையாக ஒப்பீட்டளவில் நெகிழ்ச்சியானவையாகவும் மாறிவரும் தொழிற்சந்தைத் தேவைகளுக்கு மரபு ரீதியான பல்கலைக்கழகங்களை விட தொழில் பதிலிறுப்புச் செய்பவையாகவும் உள்ளன. பல்கலைக்கழகங்களை விட குறைந்த அலகுச் செலவுகளையும் இவை கொண்டுள்ளன. மாணவர் அனுமதியானது அரசுக்கு ஒப்பீட்டளவில் குறைந்தளவு செலவை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காகவே இது இவ்வாறு அமைந்துள்ளது.

**காலப்போக்கில் உயர்கல்வி நிறுவனங்களது உள்வாரி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் மாணவர் அனுமதியின் பங்கு அதிகமாக்கப்படுவதுடன் குறைந்த தரத்தினைக் கொண்ட வெளிவாரிப் பட்டப் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் மாணவர் அனுமதி குறைக்கப்பட வேண்டும்.** கடுமையான அனுமதி மற்றும் முன்னேற்ற நிபந்தனைகளைப் பயன்படுத்தி வெளிவாரிப் பட்டப் படிப்பிலான மாணவர் அனுமதி கவனமாகக் கட்டுப்படுத்தப்பட வேண்டியிருக்கிறது. இந்த அனுமதி மற்றும் முன்னேற்றத்துக்கான நிபந்தனைகளை EDPS களுக்கு ஒரு சிறந்த தரத்தையுடைய கல்வியை வழங்குவதற்கு பல்கலைக்கழகங்களது ஆற்றலுடன் தொடர்புபட்டிருக்க வேண்டும். உள்வாரிப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் விரிவாக்கம் அடையும் போது இவை EDP யிலுள்ள பதவிகளுக்கு ஓரளவுக்குப் பிரதியீடுகளாக அமைய வேண்டும். இது தவிர SLIATE, ATI களிலான மாணவர் அனுமதியை விரிவுபடுத்துவது ATI களுக்கு சார்பான EDP களின் பிரதியீட்டுக்கு உதவுவதாக அமையும்.

**தனியார் உயர்கல்வித்துறை வளர்வதற்கும் விரிவடைவதற்கும் ஊக்குவிக்கப்படல் வேண்டும்.** ஆசியாவிலும் கிழக்கைரோப்பாவிலுமுள்ள முன்னாள் கமியுனிச நாடுகளிலும் மற்றும் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளுள்ளிட்ட உலகத்தின் பல பாகங்களிலுமுள்ள பல நாடுகள் உயர்கல்வி வாய்ப்பினையும் பரப்பினையும் அதிகரிக்கும்படி தனியார்துறைக்கு ஊக்குவித்து அதன் வளர்ச்சிக்கு உதவுகின்றன (பெட்டி 3). தனியார் உயர்கல்வி நிறுவனங்கள் பிரதானமாக தொழிலை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களையும் கற்கை நெறிகளையும் வழங்குகின்றன. பட்டதாரிகள் ஒப்பீட்டளவில் இலகுவாக வேலைகளைப் பெற்றுக் கொள்கிறார்கள். இந்த நிறுவனங்கள் சுய நிதியீட்டும் நிறுவனங்களாக இருக்கும் காரணத்தினால் தனியார் உயர்கல்வித்துறையை விரிவாக்குவது அரசாங்கத்துக்கு அதிக செலவை ஏற்படுத்துவதில்லை.

### பெட்டி 3: ரஷ்யாவிலும் சீனாவிலும் உயர்கல்வி

**ரஷ்யா**

1992 ஆம் ஆண்டின் கல்வி மற்றும் சமஷ்டி தொடர்பான சட்டத்தின் விளைவாக முதலாவது தனியார் உயர்கல்வி நிறுவனம் தோற்றம் பெற்றது. உலகளாவிய தனியார் உயர்கல்வித்துறைகளது பல அம்சங்களைப் பகிர்ந்து கொள்கின்ற அதேவேளையில் ரஷ்ய தனியார் உயர்கல்வியானது தனக்கே உரித்தான பண்புக்கூறுகளையும் கொண்டுள்ளது: உயர்கல்வி நிறுவனங்களின் உருவாக்கத்தில் கணிசமானளவுக்கு பொதுத்துறையின் ஈடுபாடு, அரச ஆதரவு பெற்ற அமைப்புக்களுடனும் அரச வளங்களுடனுமான தனியார் நிறுவனங்கள் தொடர்ச்சியாக இணைந்திருத்தல் போன்றவையாகும். 2005 ஆம் ஆண்டில் இருந்தபடி 413 தனியார் நிறுவனங்களும் 655 அரச நிறுவனங்களும் காணப்பட்டன. மொத்த உயர்கல்வி மாணவர் அனுமதியில் அண்ணளவாக 15% தனியார்துறை கொண்டிருந்தது. தனியார் பல்கலைக்கழகங்களினது பிரதான பண்புகளாவன: சந்தையை அடிப்படையாகக் கொண்டமைந்த கல்வி சார் நிகழ்ச்சித்திட்ட அளிப்புக்கள், உபகரணத்திலும் உட்கட்டமைப்பிலும் அதிகளவு செலவுகள், அவசியமற்ற ஏனைய துறைகள், கலைத்திட்டத்தில் (பாடவிதானம்) நெகிழ்ச்சித்தன்மை, குறைவான அல்லது ஒப்பீட்டளவில் குறைந்த அனுமதித் தேவைகள், வரையறுக்கப்பட்ட ஆராய்ச்சி தொடர்பான கவனக்குறிப்பு மற்றும் நிதியீட்டலுக்காக கற்பித்தல் மூலம் கிடைக்கும் பணத்தில் தங்கியிருத்தல்.

**சீனா**

மக்கள் சீனக் குடியரசு 1970 கள் வரை தனியார் உயர்கல்வியை அனுமதிக்கவில்லை. முதலாவது தனியார் உயர்கல்வி நிறுவனம் 1978 இல் ஏற்பட்டது. பிரதானமான சடுதியான அதிகரிப்பு 1980 களில் ஆரம்பித்தது. 2000 ஆம் ஆண்டளவில் 1200 தனியார் நிறுவனங்கள் இருந்தன. 2003இல் தனியார்கல்வி ஊக்குவிப்புக்கான சட்டமானது தனியார் பல்கலைக்கழகங்கள் ஸ்தாபிப்பதற்கு அதிகாரமளித்தது. துணை அல்லது/மற்றும் இளமானிப் பட்டங்களை வழங்குவதற்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டவை என வரையறுக்கப்பட்ட உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனங்களின் மொத்தத் தொகை 2000 ஆம் ஆண்டில் 43 ஆக இருந்து, 2006 இல் 278 ஆக அதிகரித்தது. இன்று சீனாவின் உயர்கல்வி மாணவர் அனுமதிகளில் தனியார் உயர்கல்வி நிறுவனங்கள் 10% ஐக் கொண்டுள்ளன. தனியார் கல்வியை அரசு அனுமதிப்பதற்கான பிரதான காரணம் அரசதுறையில் போதுமானளவு விரிவாக்கத்திற்கு அரசினால் நிதி வழங்க முடியவில்லை என்பதாகும். 1997ல் தனியார்கல்வி தொடர்பான முதலாவது தொகுதி ஒழுங்கு விதிகளை அரசு வெளியிட்டது. இவை தனியார் கல்வியின் லாபமீட்டாத தன்மையை மீண்டும் உறுதி செய்தன. இப்பொழுது அரசாங்கம் தனியார் உயர்கல்வியைச் சுறுசுறுப்பான விதத்தில் ஊக்குவிப்பதோடு தனியார் உயர்கல்வி நிறுவனங்களுக்கு சலுகைகளையும் ஊக்கவிப்புக்களையும் வழங்குகிறது.

**பல்கலைக்கழகத்துறையினுள் தொழில் அடிப்படையிலான விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப நிகழ்ச்சித்திட்டங்களிலான மாணவ அனுமதியின் பங்கு அதிகரிக்க வேண்டும்.** பல்கலைக்கழகத்துறையினுள் உயர்கல்வி மாணவர் அனுமதிக்கும் வளர்ச்சிக்குமான வாய்ப்பு பிரதானமாக புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட பிராந்தியப் பல்கலைக்கழகங்களிலேயே இருக்கிறது. இந்த நிறுவனங்களிலான மாணவர் அனுமதி விரிவாக்கம் நேரடியாக தொழிலை மையமாகக் கொண்டமைந்த நிகழ்ச்சத்திட்டங்களில் இருக்க வேண்டும். அத்துடன் இவ்விரிவாகக்கமானது ஒரு மத்திய தர நாடென்ற வகையில் தோற்றம் பெற்றுக் கொண்டிருக்கும் இலங்கையின் பொருளாதாரத் தேவைகளுடன் இணைக்கப்பட்டதாக இருக்க வேண்டும். மலேசியா, தென் கொரியா, தாய்லாந்து, சிலி, பிரேசில் மற்றும் ஆர்ஜன்டீனா போன்ற நாடுகளில் இருந்து வருவது போன்று இவை விஞ்ஞான மற்றும் தொழிநுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட துறைகளில் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறே காணப்படுகின்றது.

உயர்கல்வி வாய்ப்பு மற்றும் பரப்பை விரிவாக்குவதற்கு வேறுபட்ட கொள்கைகளை வகுப்பதற்கான ஒரு பிரதான முன்நிபந்தனை, ஒரு சிறந்த உயர்கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையினை (HEMIS) ஸ்தாபிப்பதாகும். ஒரு சிறந்த உயர்கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை, இல்லாமல் திட்டமிடல் கண்காணிப்பு முறைமை சாத்தியமில்லை. உயர்கல்வி அமைச்சும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் பல்கலைக்கழகங்களை உள்ளடக்கும் ஒரு HEMIS ஐத் ஸ்தாபித்துக் கொண்டிருக்கின்றன. காலப்போக்கில் SLIATE ஐயும் தனியார் உயர்கல்வித்துறையையும் உள்ளடக்கும் விதத்தில் உயர்கல்வி அமைச்சு "ஹெமிஸை" விரிவுபடுத்த வேண்டும்.

## உயர்கல்வியைத் திட்டமிட்டு நிதியீட்டுவதற்கு ஒரு புதிய மாதிரி அவசியமாகும்.

வாய்ப்பு, பரப்பு, தரம், நிர்வாகம், பொருத்தப்பாடு ஆகிய அதன் அனைத்துப் பரிமாணங்களையும் உள்ளடக்கும் விதத்தில் உயர்கல்வித்துறையை விருத்தி செய்வதற்கு கணிசமானளவு வளங்கள் தேவைப்படும். கிடைக்கின்ற வளங்களின் தொகுப்பு அபிவிருத்திக்கு சாத்தியமான மாற்று வழிகள் எவை என்பதைத் தீர்மானிக்கும். இதன் விளைவாக அபிவிருத்தி உபாயத்திற்கு வளங்களை அணி திரட்டுவதும், காணப்படும் வளங்கள் வினைத்திறனுடன் பயன்படுத்துவதை உறுதிப்படுத்துவதும் முக்கியமானதாகும்.

***சவால்கள்***

**நடுத்தர மத்திய நாடுகளுடனும், ஏனைய வளர்முக நாடுகளுடனும் ஒப்பிடுகையில் இலங்கை குறைவாகவே உயர்கல்வியில் முதலிடுகிறது.** ஏனைய ஒத்த நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது இலங்கை அதன் தேசிய செல்வத்தில் கணிசமானளவு குறைந்த பங்கினையும், அதன் பொது வரவுசெலவு திட்டத்தில் அதைவிடக் குறைந்த பங்கினையும் கல்வியில்

செலவிடுகின்றது (உரு 3). ஏனைய வளர்முக நாடுகளுடன் ஒப்பிடுகையில் ஒட்டுமொத்தமாக ஆசிய நாடுகள் கல்வியில் குறைவாகவே முதலிடுகின்றன. பல்கலைக்கழகக் கற்பித்தலிலும் ஆராயச்சியிலும் மற்றும் மாற்று உயர்கல்வி நிறுவனங்களிலுமான அரச முதலீடானது GDP யின் பங்கு என்ற வகையிலும் (0.5% விடக் குறைவான), உயர்கல்விக்கு ஒதுக்கப்பட்ட வரவுசெலவு திட்ட ஒதுக்கீடு என்ற வகையிலும் (18% விடக் குறைவாகவுள்ளது) தற்போதைய உலக பொருளாதார நிலைமையிலும் இலங்கை சிக்கலான ஒரு சூழலை எதிர்நோக்குகின்றது. அதனுடன் குறுகிய காலத்தில் உயர்கல்வித்துறைக்கான பொது நிதியை விரிவுபடுத்துவதற்கு அதிக வாய்ப்பிருப்பதில்லை.

**உரு 3: தேசிய வருமானத்தினதும், அரச வரவுசெலவு திட்டத்தினதும் ஒரு பங்கு என்ற வகையில் அரசாங்கத்தின் கல்வி ஒதுக்கீடு**




**பொருளாதாரம் பழைய நிலைமைக்குத் திரும்பும் போது தேவையான மனித வளங்கள் கிடைப்பதனை உறுதிப்படுத்தும் பொருட்டு உலக பொருளாதார நிதி நெருக்கடியின் போது உயர்கல்வி முதலீடு பேணப்பட வேண்டும்.** உலகிலும் பிராந்தியத்திலும் உள்ள அனேக நாடுகளைப் போன்று இலங்கை ஏற்கனவே அண்மைய பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. உண்மையில் அடுத்த 8 வருடங்களுக்கும் சுமார் 4% எனும் வளர்ச்சி வீதம் காணப்படும் என்ற நம்பிக்கையற்ற சூழ்நிலையில் இதே உயர்கல்வித்துறை அடைய வேண்டுமாயின், இக்காலப்பகுதிக்குள் GDP யின் அதன் பங்கு GDP யின் ஒரு வீதமாக அதிகரிக்கப்பட வேண்டும். இது சாத்தியமானதல்ல. அத்துடன் இலங்கையுடன் போட்டி போட்டுக் கொண்டிருக்கும் நாடுகளுக்குச் சமமான நிலையில் இலங்கையை இது வைக்கும். ஆனால் இதன் விளைவாக ஒப்பீட்டளவில் குறைந்த உற்பத்தித்திறன் கொண்ட ஏனைய துறைகளில் அதற்கமைவாகக் குறைக்கப்பட வேண்டியிருக்கும். அரச நிதியீட்டடை குறையச் செய்வதற்கான ஆக்கபூர்வமான வழிகள் அவசியம் என்பதையும், இது தவிர்க்க முடியாததென்பதையும் இந்த ஏககால நடவடிக்கைகள் காட்டுகின்றன.

**உயர்கல்விதுறைக்கு நிதியளிப்பதற்கான உள்ளார்ந்த ஆற்றலைப் பயன்படுத்துவதற்கு இலங்கை தவறுகின்றது.** தனியார் உயர்கல்வித்துறை காணப்படுவதுடன் உயர்கல்வித்துறைக்கு வாய்ப்பினை வழங்குவதில் பாரிய பங்கினையும் இது வகிக்கின்றது. வெளிநாட்டு பல்கலைக்கழக மட்டத்திலும் தொழில் சார் மட்டத்திலும் சான்றிதழ், கற்கை நெறிகள் மட்டத்திலும் இவ்வாறு வாய்ப்புக்களை இத்துறை வழங்குகின்றது. ஆயினும் பொதுவாக உயர்கல்வி நிறுவனங்களின் பட்டதாரிகள் ஒப்பீட்டளவில் இலகுவாக வேலைகளை பெறுகின்றனர். ஆயினும் கொள்கைச் சூழலானது பிரதானமாக பொது உயர்கல்வித் துறை மீது மாத்திரம் கவனக்குவிப்பு செய்வதுடன் தனியார் உயர்கல்வித்துறையை அசட்டை செய்யும் போக்கை கொண்டிருக்கிறது. தனியார் முதலீட்டை ஊக்குவித்து, உயர்கல்வியில் அரச தனியார் பங்குடைமை உருவாக்கத்திற்கு உதவும் உயர்கல்வியிற் காணப்படும் உலகப் போக்குடன் இது முரண்படுகிறது. எனவே முன்னர் குறிப்பிடப்பட்டது போன்றும், மிகவும் வலியுறுத்திக் கூறவேண்டியது போன்றும் இலங்கை அனைத்து நடுத்தர வருமான நாடுகளினுள் மிகவும் அபிவிருத்தி குன்றிய தனியார் உயர்கல்வித்துறைகளில் ஒன்றைக் கொண்டுள்ளது. மேலும், இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் உள்ளிட்ட ஒப்பீட்டளவில் கணிசமான அளவு குறைந்த வருமானம் கொண்ட நாடுகள் உயர்கல்விக்கு தனியார்துறை முதலீட்டினை கவர்ந்து இழுப்பதில் இலங்கையை மிஞ்சும் விதத்தில் செயற்படுகின்றன.

## *உபாய ரீதியான மாற்று வழிகள்*

**உயர்கல்விக்கான அரச ஒதுக்கீட்டின் புதிய மாதிரியானது பிரதானமாக வாய்ப்பினை விட தரம், பொருத்தப்பாடு எனபவற்றின் மீதே கவனக்குவிப்பு செய்ய வேண்டும்.** கடந்த 10-15 வருடகாலத்தின் போது பல்கலைக்கழக வாய்ப்பினை அதிகரிப்பதே அரசின் பிரதான கொள்கை முன்னுரிமையாக இருந்தது. ஒவ்வொரு மாகாணமும் குறைந்தது ஒரு பல்கலைக்கழகத்தைக் கொண்டிருக்க வேண்டுமென்பதற்காக பிரதானமாக புதிய பிராந்திய பல்கலைக்கழகங்களை உருவாக்குவதன் மூலம் இது இடம்பெற்றது. இப்பொழுது அரசாங்கம் மேலும் உயர்ந்த ஒரு அபிவிருத்தித் திட்டத்திற்கு உயர்ந்து உயர்கல்வித்துறையில் தர மேம்பாட்டிற்கும் பொருளாதார சமூக பொருத்தப்பாட்டிற்கும் அதியுயர்ந்த முன்னுரிமையை வழங்க வேண்டும். இந்தச் சூழமைவில் தேவையான பல நடவடிக்கைகள் உள்ளன. குறிப்பாக தற்போதைய பொருளாதார வளர்ச்சியை பேண முடியாதவிடத்து, முறையில் உள்ள வினைத்திறனை அதிகரிக்கும் அதேவேளை, இந்த சகல நடவடிக்கைகளையும் இணைப்பதற்கு தேசிய செல்வத்தில் மேலும் உயர்ந்த ஒரு பங்கை முதலிட வேண்டிய நிலையும் ஏற்படும். (உரு 4)

**உரு 4: மொ.தே.உ யில் உயர்கல்வியின் செலவு (மதிப்பிடப்பட்ட, 2012)**




**உயர்கல்வித்துறைக்கான அரச வளங்களில் மேலும் உயர்வான ஒரு பங்கு மாற்று உயர் கல்வித்துறைக்கு ஒதுக்க வேண்டும்.** மாற்று உயர்கல்வித்துறையை விருத்தி செய்வதற்கு மேலும் அதிக முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். கோட்பாட்டளவில் இத்துறை நேரடியாக தொழிலை அடிப்படையாகக் கொண்ட கற்கை நெறிகளை வழங்குகின்றது. இக்கற்கை நெறிகளின் கால அளவு பொதுவாகப் பல்கலைக்கழக நிகழ்ச்சித்திட்டங்களை விடக் குறைவாகவுள்ளது. அத்துடன் இவை ஒப்பீட்டளவில் குறைந்த அலகுச் செலவையும் கொண்டுள்ளன. எனவே இத்துறையின் விரிவாக்கம் செலவு குறைந்ததும் வினைத்திறன் கொண்டதுமான ஒரு தெரிவாகும்.

**மாணவர் கற்றலை அதிகரிப்பதற்கும் கற்பித்தலையும் ஆராய்ச்சியையும் மேம்படுத்துவதற்கான புத்தாக்க முன்னெடுப்புக்களுக்கு நிதி வழங்கல், மற்றும் பல்கலைக்கழக நிதி வழங்கலுக்குமான மிக உயர்ந்த முன்னுரிமையாக இது அமைய வேண்டும்.** பல்கலைக்கழக நிறுவனம் சார் திட்டங்களுக்கும், வரவு செலவுத்திட்ட யோசனைகளுக்குமான நிதி வழங்கல் வாய்ப்பு, பரப்பு அகியவற்றின் மீதான அவற்றின் தாக்கங்களின் அடிப்படையிலன்றி பிரதானமாக தரத்தின் மீதான அவற்றின் தாக்கங்களின் அடிப்படையில் அமைய வேண்டும். இது தவிர பல்கலைக்கழகங்களுக்குக் கிடைக்கும் வளங்களின் ஒரு பகுதி சுமார் 10-15 வீதம் பீட நிகழ்ச்சித்திட்டங்களின் தரத்தினையும் பொருத்தப்பாட்டினையும் மேம்படுத்துவதற்கான செயலாற்றுகையின் அடிப்படையிலமைந்த முன்னெடுப்புகளுக்கு நிதியீட்டுவதற்காக ஒதுக்கப்பட வேண்டும்.

**அபிவிருத்திக்கான வருமானத்தை உருவாக்குவதற்கு உயர்கல்வி நிறுவனங்கள் ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.** உயர்கல்வி நிறுவனங்களால் வருமானத்தை உருவாக்கும் பல்வேறு வகையான சேவைகள் வழங்கப்படுகின்றன. இவற்றில் ஆராய்ச்சி மற்றும் ஆலோசனைச் சேவைகள் விஸ்தரிப்பு மற்றும் குறுகிய கற்கை நெறிகள் ஆகியவற்றினூடாக உழைக்கப்படும் வருமானமும், பட்டப்பின் படிப்பு கற்கை நெறிகள், டிப்ளோமாக்கள், சான்றிதழ் கற்கை நெறிகள், ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் கட்டணங்கள் ஆகியனவும் அடங்கும். பொருத்தமான கொள்கை முன்னெடுப்புகளுக்கூடாக தமது வருமானத்தை அதிகரிப்பதற்கு உயர்கல்வி நிறுவனங்களை அரசாங்கம் ஊக்குவிக்க வேண்டியிருக்கிறது. இச்சூழமைவில், உயர்கல்வி

நிறுவனங்களால் ஈட்டப்படும் வருமானம் அரச நிதியுதவிக்கு மேலதிகமானதாக அமைய வேண்டுமென்பதும் உயர்கல்வி நிறுவனம் தனது சொந்த வருமானத்தை அதிகரிக்கும் பொழுது, அதற்கு வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்படும் நிதி குறைக்கப்படக்கூடாது என்பதும் முக்கியமானதாகும். இதைத் தவிர உதாரணமாக வியாபார நிலையங்கள், தொழிநுட்ப வர்த்தக மயமாக்கல் அலுவலகங்கள் ஆகியவற்றை ஸ்தாபிப்பதனூடாக வருமான உருவாக்கல் செயற்பாடுகளுக்கான நிறுவன ரீதியான சூழல் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

**முறைமையிலுள்ள உள்ளக வினைத்திறனை மேம்படுத்துவதற்கும், செலவைக் குறைப்பதற்குமான நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட வேண்டியிருக்கின்றன.** இதில் கல்விசாராப் பணிக்குழுவிற்கு கல்வி சார் பணிக்குழுக்கள் எனும் விகிதம் மற்றும் பணியாளர்-மாணவ விகிதம் ஆகியவற்றை உயர்த்துதல், உபகரணக் கொள்வனவு போன்ற நடவடிக்கைகளில் நடைமுறை வினைத்திறனை அதிகரித்தல் ஆகியன அடங்கும். ஆயினும் உயர்கல்வித் துறையினுள் உருவாககப்படும் செலவுச் சேமிப்புக்களை இத்துறையினுள்ளேயே தக்க வைத்துக் கொள்வது முக்கியமானதாகும். ஒரு உயர்கல்வி நிறுவனத்தினுள் உருவாக்கப்படும் எந்தவொரு செலவுச் சேமிப்புக்களும் அந்நிறுவனத்தினுள்ளேயே மீள முதலீடு செய்வதற்குப் பயன்படுத்தப்பட வேண்டும்.

**உயர்கல்வியில் அரச-தனியார் பங்குடமைகளுக்கும் தனியார்துறை முதலீட்டிற்குமான ஒரு சாதகமான சூழலை உருவாக்குதல் மேலும் அதிக வளங்களைத் திரட்டி தமது உயர்கல்வித்துறைகளை அபிவிருத்தி செய்வதற்கு ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் உள்ள முன்னாள் கமினியுச நாடுகள் உள்ளிட்ட ஏனைய நாடுகளுக்கு உதவியிருக்கின்றது.** இந்த மாற்று வழியினை இலங்கையிலுள்ள கொள்கை வகுப்பாளர்களும் முன்னெடுக்க வேண்டும். உயர்கல்வியில் தனியார்துறையின் பங்கேற்பினை விரிவாக்குவதற்கான ஒரு முக்கிய நடவடிக்கை ஒரு உத்தியோகபூர்வ அங்கீகரிப்பு (accredition) முறையை ஸ்தாபிப்பதாகும். இது சிறந்த தரத்தினைக் கொண்ட தனியார் உயர்கல்வி நிறுவனங்களின் நுழைவினையும், வளர்ச்சியினையும் உறுதிப்படுத்தும். சுவீடன், சில்லி, போலந்து மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் சில மாநிலங்களில் உள்ளது போன்று தனியார்துறை உயர்கல்வி நிறுவனங்களுக்கான அரசதுறை மானியமொன்றினை வழங்கும் முறையையும் இலங்கை பரிசீலிக்கலாம். இதைத்தவிர நியாயத்தன்மையையும், சமூக நியாயத்தையும் மேம்படுத்தும் பொருட்டு உயர்கல்வி நிறுவனங்களில் பதிவு செய்து கொண்ட ஒப்பீட்டளவில் வறிய மாணவருக்கான கொடுப்பனவுப்பத்திரம், நிலையான வருமான மற்றும் கடன் திட்டங்களை இலங்கை அறிமுகம் செய்யலாம்.

## இலங்கையின் கலாசாரத்தையம் சமூகத்தையும் செழுமைப்படுத்தும் தனித்துவமான நிலையில் உயர்கல்வி உள்ளது.

**ஒரு நாட்டின் கலாசார அரசியல் சமூக வாழக்கைக்கு உயர்கல்வி நிறுவனங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.** அவை ஒரு சமூகத்தின் விழுமியங்களையும், நியமங்களையும் வடிவமைத்து பிரஜைகளின் அறிவூட்டலுக்கும் ஜனநாயகத்திற்குமான வாய்ப்பினை உருவாக்குகின்றன. பல்வேறு இன, மத குழுக்களைக் கொண்டதும், நீண்ட கால இன அடிப்படையிலான பிரிவினைவாத மோதலிலிருந்து மீண்டு கொண்டிருக்கும் இலங்கை போன்ற ஒரு நாட்டிற்கு உயர்கல்வியின் இவ்வம்சம் குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்தது.

**ஒரு அமைதியான பல்லின, பல்மத, பல்கலாச்சார இலங்கைக்கான சாதகமான ஒரு சூழலின் உருவாக்கத்தினை உயர்கல்வித்துறை வழி நடாத்த முடியும்.** அதே போன்று வழி நடாத்தவும் வேண்டும். நாடு இன்று எதிர்நோக்கும் மிகப் பெரிய சவாலாக அமைவது வேறுபட்ட இன, மதக்குழுக்களைச் சேர்ந்தவர்கள் நாடு முழுவதிலும் கௌரவத்துடனும் நம்பிக்கையுடனும் சமாதானமாக வாழக்கூடியதும் ஒன்றிணைந்து இடைத்தொடர்பினை ஏற்படுத்தக்கூடியதுமான ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதுமாகும். அத்தகைய ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு உயர்கல்வி நிறுவனங்கள் பல வழிகளில் பங்களிப்புச் செய்யமுடியும். முதலாவதாக, குறிப்பாக கலை, மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்களில் உள்ள கல்விசார் கற்கை நெறிகளது உள்ளடக்கமும் ஆராய்ச்சி செயற்பாடுகளும் பல்லின, பல்மத சமூகங்களது சாதகமான பண்புகளையும் அத்தகைய சமூகங்களின் ஸ்திரத்தன்மைக்கும் ஐக்கியத்திற்குமான தேவைகளையும் விளக்கி முதன்மைப்படுத்திக் காட்டமுடியும். இரண்டாவதாக, அனேகமாக சகல உயர்கல்வி நிறுவகங்களும் தமது மாணவர், பணியாளர் ஆகியோருக்கிடையில் வேறுபட்ட இன, மதக் குழுக்களைக் கொண்டிருக்க வேண்டும். வேறுபட்ட குழுக்களுக்கிடையில் கூட்டுப்பணிக்கும் ஒத்துழைப்பிற்குமான ஒரு சிறந்த சூழலை இவை அளிக்கும். மூன்றாவதாக, உயர்கல்வி நிறுவனங்கள் தமக்கிடையே அறிவு சார் கலாச்சாரம் மற்றும் விளையாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபட முடியும். நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் வாழும் வேறுபட்ட இன, மதச் சமூகங்களைச் சேர்ந்த மாணவர்கள் சந்தித்து ஒன்றிணைந்து பழகுவதற்கு இவை உதவும். நான்காவதாக, வேறுபட்ட இன, மதக் குழுக்களைச் சேர்ந்த கல்வியாளர்களுக்கிடையே ஒன்றிணைந்து மேற்கொள்ளும் ஆராயச்சிகளுக்கு உயர்கல்வி நிறுவனங்கள் ஒரு சூழலை வழங்கும்.

**ஒரு ஜனநாயக நாட்டிற்குத் தேவையான அறிவூட்டப்பட்ட குடிமக்களை உருவாக்கி வளர்ப்பதில் உயர்கல்வித்துறை முன்னணியில் திகழ வேண்டும்.** இலங்கையில் காணப்பட்டது போல் ஒரு நீண்டகால ஆயுத மோதலானது சிவில் நிர்வாகத்தினதும் அரசியல் ஜனநாயகத்தினதும் சிறப்பான தொழிற்பாட்டிற்கு அவசியமான நியமங்களையும்

மனப்பாங்குகளையும் தேய்வடையச் செய்துவிடும். அரசியல் ஜனநாயகத்தின் மையமாக அமையும் பன்மைவாதம், சமூக சகிப்புத்தன்மை, பல்வகைமையை மதித்தல் மற்றும் பகுத்தறிவான விவாதம் போன்ற விழுமியங்களையும் நியமங்களையும் உயர்கல்வி நிறுவனங்கள் தமது கற்பித்தலுக்கூடாகவும், ஆராய்ச்சிகளுக்கூடாகவும் அதிகரித்து பலப்படுத்த வேண்டியுள்ளது.

## மாற்றத்திற்கு வழிகாட்டுவதும் அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதும்

**உயர்கல்வித் துறையின் அபிவிருத்தி இலங்கைக்கு மிகவும் நன்மையானதாகவும் பெறுமதியுடையதாகவும் இருக்கும்.** அது ஒரு சிக்கலானதும் சவால் நிறைந்ததுமான ஒரு செயல்முறையாக இருக்கும். அத்துடன் அதற்கு அரசியல் அதிகாரத்திலிருப்பவர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களிடமிருந்து தூர நோக்கினைக் கொண்ட தலைமைத்துவமும் உயர்கல்விச் சமூகத்திலிருந்து நீண்டகால அர்ப்பணமும் அவசியமாகத் தேவைப்படுகின்றது.

**உயர்கல்வி நிறுவன அபிவிருத்திக்கு அரசியல் அதிகாரத்திலிருப்பவர்களது நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கக்கூடிய அர்ப்பணம் தேவையாக இருக்கிறது.** குறிப்பாக ஆட்சி முறையில் புத்தாக்க முன்னெடுப்புக்கள் கடினமானவையாக அமையலாம். இதற்குக் காரணம் மத்திய மட்டங்களில் இருந்து பல்கலைக்கழகங்கள், உயர் தொழிநுட்ப நிறுவனங்கள் போன்ற தனி நிறுவனங்களுக்கு அதிகாரத்தையும் வலுவினையும் பகிர்ந்தளிப்பதுடன் இவை பொதுவாகத் தொடர்புடையவையாகவும் காணப்படும். இது தவிர வரிவிதிப்பு மூலமான நிதியீட்டலையும் வரிப்பண ஊக்குவிப்பாகவும் வெகுமதியாகவும் செயலாற்றுகையின் அடிப்படையிலமைந்த நிதியளிப்பினையும் விட பரந்த வீச்சிலமைகின்ற வருமான முறைமைகளை அறிமுகப்படுத்துதல் போன்ற பல்கலைக்கழக நிதிவழங்கலிலான நவீன புத்தாக்கங்கள் சர்ச்சைக்குரியவையாக அமையலாம். இதற்க்கு காரணம் சில மரபு ரீதியான மனப்பாங்கினைக் கொண்ட தனி நபர்களை, அவர்களது சௌகரியமான வலயத்திலிருந்து இது வெளியே தள்ளுகிறது. எனவே அரசியல் முறையின் அதியுயர் மட்டஙகளிலிருந்து தூர நோக்கும் நீண்டு நிலைத்திருக்க்கூடியதுமான தலைமைத்துவம் கொள்கை முன்னெடுப்புகளுக்கு தேவையானதாகவிருக்கிறது.

**இலங்கையில் உயர்கல்வி அபிவிருத்தி உபாயம் குறிப்பாக கல்விச் சமூகத்திற்கிடையில் விரிவாக தெரியப்படுத்தப்பட்டு பரந்துபட்ட உடைமை உருவாக்கப்பட வேண்டும்.** சிறந்த தரத்திலான உயர்கல்வி சேவையை வினியோகிப்பதற்கு தனிப்பட்ட கல்விசார் பணிக்குழு உறுப்பினர்கள் மிக முக்கியமானவர்களாக இருக்கிறார்கள். எனவே ஒரு உயர்கல்வி உபாயமொன்றினை வெற்றிகரமாக விருத்தி செய்வதற்கு கல்வியியலாளர்களுடைய உடைமையும் அர்ப்பணமும் மிகவும் தேவையான ஒரு விடயமாகும். உயர்கல்வி அபிவிருத்தித்திட்டத்தின் பரப்பு, குறிக்கோள், அதற்கான காரணம் ஆகியவற்றை உயர்கல்வி அமைச்சு, NEC, UGC ஆகியவை கல்வியலாளர் சமூகத்துக்கு தெரியப்படுத்த வேண்டும். அவற்றை அமுல்படுத்துவதற்கான உபாயங்கள் ஒழுங்கு முறை ஆகியவற்றை கல்வியியலாளர் சமூகத்தினது பங்கேற்பு உடைமை மற்றும் அர்ப்பணம் ஆகியவற்றுடனே செய்ய வேண்டியிருக்கும்.

**வடக்கு, கிழக்கு மற்றும் ஏனைய வெளி மாகாணங்கள் போன்ற பின் தங்கிய பிரதேசங்களிலுள்ள உயர்கல்வி நிறுவனங்களுக்கு ஒரு விசேடமானதும் முன்னுரிமையடிப்படையில் அமைந்ததுமான கொள்கைக் கவனம் அவசியம்.** வேறுபட்ட உயர்கல்வி நிறுவனங்களுடைய அபிவிருத்தி மட்டத்திற்கு அமைவாக உயர்கல்வி அபிவிருத்தி உபாயம் வேறுபட வேண்டியிருக்கிறது. கொழும்பு, கண்டி, மாத்தறை போன்ற பெரிய நகரங்களுக்கு அண்மையில் உள்ள ஒப்பீட்டளவில் பழமை வாய்ந்த நன்றாக ஸ்தாபிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனங்கள் ஒரு உயர்ந்த அபிவிருத்திக் கட்டத்தில் காணப்படுகின்றன. இதன் விளைவாக எதிர்பார்ப்பு மிகுந்த அபிவிருத்தி முன்னெடுப்புக்கள் அவற்றால் மேற்கொள்ளப்பட முடியும். மாறாக வடக்கு கிழக்கு மற்றும் ஏனைய தூர மாகாணங்கள் போன்ற பின்தங்கிய பிரதேசங்களில் அமைந்துள்ள உயர்கல்வி நிறுவனங்கள் ஒப்பீட்டளவில் குறை விருத்தியுடையவையாகக் காணப்படுகின்றன. அத்துடன் ஒப்பீட்டளவில் குறைந்த தகைமைகளைக் கொண்ட பணியாளர்கள், ஒப்பீட்டளவில் குறைவான வசதிகள் மற்றும் தற்போது ஸ்தாபிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற கல்வி சார் மற்றும் முகாமைத்துவ முறைமைகள் ஆகியவற்றை இவை கொண்டுள்ளன. இந்த உயர்கல்வி நிறுவனங்களுக்கு மேலும் அதிகமான கொள்கைக் கவனமும் உபாய ரீதியான நிதி வழங்கலும் அவசியமாக இருக்கிறது.

**உயர்கல்வி அபிவிருத்தி அமுலாக்கச் செயன்முறையில் ஊடகத்துறை பங்காளியாக இருக்க வேண்டும்.** தகவலை வழங்கி பொதுமக்களது புலக்காட்சியை (விடயங்களைப் புரிந்து கொள்ளும் விதத்தினை) வடிவமைப்பதில் மக்களூடகம் ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது. உயர்கல்வி முறைமையின் சாதனைகள், அதன் எதிர்காலச் சவால்கள், இச்சவால்களில் கவனம் செலுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் உபாயங்கள் ஆகியன ஊடகத்துறைக்குத் தெரியப்படுத்தப்பட்டு அவற்றை ஊடகத்துறை விளங்கிக் கொள்ள வேண்டும். உயர்கல்வி முறைமை தொடர்பான தமது எதிர்கால நோக்கினையும், அந்த நோக்கினை அடைவதற்கான தமது உபாயத்தினையும் மாற்றத்தினதும் அபிவிருத்தியினதும் தலைவர்கள் பொது மக்களுக்கு அறியப்படுத்துவதற்கு இது உதவும். உயர்கல்வி அபிவிருத்தி உபாயத்திற்கான அரசியல் ஆர்வத்தையும், அர்ப்பணத்தையும் உருவாக்குவதற்கு பொது மக்களது ஆதரவும் புரிந்துணர்வும் மிகவும் முக்கியமானவையாக இருக்கும்.

**உயர்கல்விச் சமூகமானது நாட்டினது மிகவும் சிறந்த புத்தி ஜீவிகளையும் நாட்டின் பொருளாதார மற்றும் மனித அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதற்கான தனித்துவமான உள்ளார்ந்த ஆற்றலையும் கொண்டள்ளது.** ஆயினும் இது கடந்த காலத்தில் கணிசமானளவு ஒரு குறைவாகப் பாவிக்கப்பட்ட ஒரு உள்ளாந்த ஆற்றலாகும். இத்துறையினால் எதிர்நோக்கப்பட்ட பல்வேறு தடைகளும் துறைக்குள் காணப்படும் பலவீனங்களும் இதற்குக் காரணமாகும். நாட்டினது கல்வியாளா் சமூகம் உயர்கல்வித்துறை அபிவிருத்திக்குத் தலைமை தாங்கி, அதில் பங்கேற்று ஆதரவளிக்க வேண்டியுள்ளது. இந்த அபிவிருத்திச் செயன்முறை பல மட்டங்களில் இடம்பெற வேண்டியிருக்கும். முழுத்துறையினது மட்டம், துறைக்குள் அமைந்த தனியான நிறுவனங்களது மட்டம், நிறுவனங்களுள் நடாத்தப்படும் தனியான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கற்கை நெறிகளது மட்டம் என்பன இம்மட்டங்களிலடங்கும். உயர்கல்விச் சமூகம் இந்த ஒவ்வொரு மட்டத்திலும் தொழிற்படுகின்றது. அத்துடன் ஒவ்வொரு மட்டத்திலும் மற்றும் ஒட்டுமொத்தமாக அனைத்து மட்டங்களிலும் உயர்கல்விச் சமூகம் அபிவிருத்தியைத் தொடர்ந்து பேண முடியும்.